# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,203 — 1921 ம் ஞு ஆவணிமீ 12 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV. — நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஊறப்பொலவில் பாடசாலைகள் கட்டுகிற என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 17,593. குறிச்சி—ஊறப்பொல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | டம்புககலந்த .. | தென்னைகளும் மற்றுமரங்களும் இடுகு கக்கூசும் கிணறும், இடுகு கொட்டலின் பகுதியுமுள்ள தோட்டம் .. | டபுள்சு. டி. சொலமன் அப்புகாமியும் மற்றவர்களும் | 2 | 0 | 9·9 |

எடுத்துக் கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ம் ஞு செப்டம்பர் மாசம் 5 ந் தேதியிலன்று 12 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1921 ம் ஞு ஓகஸ்டுமீ 9 ந் உ.

ஜே. ஜி. பிறேசர்,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கட்டுக்குறுந்தை, தெபுவானை, மத்துகம ரேட்டின் சந்திப்பில் உள்ள கெட்ட முடக்கைத் திருத்துவது என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 17,584. குறிச்சி—தெபுவானை.

| காணித் துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கந்தானேஒவிற்ற .. | மண்சிவரும் ஓடுகால் மேயப்பெற்ற கடையும் | கே. லீனிகாமியும் மறுபேரும் .. | 0 | 0 | 0·44 |
| 2 | ஷை .. | நிலைபரமாகக் கட்டப்பட்ட கடை | எஸ். சீ. எம். ஆதன் .. | 0 | 0 | 2·25 |
| 3 | ஷை .. | ஷை .. | டீ. ஜே. அபெயவார்தன .. | 0 | 0 | 1·22 |
| 4 | ஷை .. | ஷை .. | டபிள்யு. எவ். குணதிலக .. | 0 | 0 | 4·50 |
| 5 | ஷை .. | வாழைத்தோட்டம் .. | எஸ். சீ. எம். ஆதன் .. | 0 | 0 | 0·50 |
| 6 | ஷை .. | ஷை .. | டீ. ஜே. அபெயவார்தன .. | 0 | 0 | 0·55 |
| 7 | ஷை .. | வாழைத்தோட்டமும் இரண்டு கட்டுமோனப் படிகளும் | டபிள்யு. எவ். குணதிலக .. | 0 | 0 | 3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ம் ஞு செப்டெம்பர்மாதம் 7 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு தெபுவானைத் தானயத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1921 ம் ஞு ஜூலைமீ 8 ந் உ.

ற்றீ. ஏ. ஹொட்சன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் சுகாதாரசங்க எல்லைக்குள், ஹொறணையில் ஓர் பிரசித்தக் கக்கூசு கட்டுவதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 17,564. குறிச்சி—ஹொறணை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கோப்பியாவத்தை | 2 தென்னமரமும் கிணறும் கக்கூசும் கொண்ட தோட்டம் | ஜே. பீ. ஜயசூரிய | 0 0 12·25 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ம் ஞு செப்டெம்பர் மாசம் 6 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு ஹொறணை தானயத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1921 ம் ஞு ஆகஸ்டுமீ 3 ந் உ.

ற்றீ. ஏ. ஹொட்சன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வத்தகாமத்தில் பிரசித்த சவச்சாலை என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 7,171. குறிச்சி—யற்றவற, பண்ணுகம.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | துரேயத்தென்னலினு | பழமரங்களடங்கியசேனை | எஸ். எம். மரக்காயர் | 1 0 5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ம் ஞு செப்டெம்பர் மாசம் 12 ந் தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1921 ம் ஞு ஆகஸ்ட்மீ 3 ந் உ.

றீ. ஜீ. வில்லட்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மாவலை என்னுமிடத்திலே கமத்தொழில்களை விர்த்தியாக்கும் பொருட்டு தேள்வையாயிருக்கும் தோட்டத்துக்கும் ஒரு வீட்டுக்கும் என்னும் (பகிரங்கதேவைக்கு) வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 7,110. குறிச்சி—மாவலை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | தீப்பேகொட | பாழ் நிலம் | பி. குமாரிஹாமியும் இன்னும் சிலரும் | 0 0 29·6 |
| 2 | ஷை | ஷை | ஷை | 0 2 11·7 |
| 3 | ஷை | தோட்டம் | ஷை | 1 1 0·8 |

எடுத்துக் கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ௵-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ௵ செப்டம்பர்மாசம் 5 ௳ தேதியிலன்று முன்பகல் பத்து மணிக்கு நுவரெலியா கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நுவரெலியா கச்சேரி,
1921 ம் ஆண்டு ஆகஸ்ட்மீ 3 ௳.

ஈ. தீ. டைசன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் றேயில்வே டிப்பார்ட்மென்றால் ஒரு தேயிலைத்தோட்டத்து கம்பெனிக்குச்சேர்ந்த நிலத்தை எடுக்கப்பட்டிருக்கிறபடியால் அந்நிலத்தைக் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் அணைக்கும்படி என்னும் (பகிரங்க தேவைக்கு) வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 7,205. குறிச்சி—தலாவக்கேல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப |
|---|---|---|---|---|
| 1 | தலாவக்கெலதோட்டம் .. | பந்துவிளையாடும்படி உண்டாக்கப்படும் இடம் | தலாவக்கெலை தோட்டம் கம்பெனி .. | 0 0 14·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ௵-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ௵ செப்டம்பர் மாசம் 5 ௳ தேதியிலன்று பின்னேரம் இரண்டு மணிக்கு நுவரஎலியா கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நுவரெலியா கச்சேரி,
1921 ௵ ஆகஸ்ட்டுமீ 3 ௳.

ஈ. தீ. டைசன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ௵-த்து 3 ம் இலச்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அம்மாந்தொட்டை ஆஸ்பத்திரியின் திருத்தல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 11,858. குறிச்சி—அம்பாந்தோட்டை.

| துண்டு. | காணியினது பெயர் | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | இஸ்பிறிதாலேகாவவத்த .. | தோட்டம் .. | மிஸ்கின் பின்னூற் .. .. | 0 0 15·59 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ௵ (செப்டெம்பர்) புரட்டாதி மாசம் 5 ௳ தேதியிலன்று 10 மணிக்கு அம்பாந்தோட்டை கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அம்பாந்தோட்டைக் கச்சேரி,
1921 ௵ அகோஸ்துமீ 5 ௳.

ஏ. பீ. பூன்,
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஒரு ஒழுங்கைப் போக்கை மாற்றுவதற்கென்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 5,477. குறிச்சி—உடுவில்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | நெடுங்கேணி .. | தோட்டம் .. | (1) எஸ். யோசுவா, (2) வீ. முத்துக்குமாரு பெண் ஆச்சிக்குட்டி, (3) விசுவலிங்கம் பெண் தங்கமுத்து | 0 0 12 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ம் ஞூ (செப்டெம்பர்) புரட்டாதிமாசம் 14 ந் திகதியிலன்று பின்னேரம் 1·30 மணிக்கு யாழ்ப்பாணக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிஉள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுககாய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1921 ம் ஆண்டு (ஆகஸ்ட்) ஆவணிமீ 5 ந் வ.

பி. கொன்ஸ்றன்ரைன்,
வடமாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தீவுப்பகுதியில் மண்டைதீவில் அரசாட்சியாரின் தமிழ்ப் பாடசாலை ஒன்று ஸ்தாபித்தற்கென்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 5,505. குறிச்சி—மண்டைதீவு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | சீமணத்தியம்பலம் .. | பள்ளிக்கூடமும் வளவும் .. | சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை .. | 0 1 20·6 |
| 2 | ஷை .. | வெற்றுநிலமும் கிணறும் .. | ஷை .. .. | 0 0 35·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டியபிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ம் ஞூ (செப்டெம்பர்) புரட்டாதிமாசம் 14 ந் தேதியிலன்று பின்னேரம் 1·30 மணிக்கு யாழ்ப்பாணக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத்தத்தமக்கு அக்காணிகளிஉள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1921 ம் ஞூ (ஆகஸ்ட்) ஆவணிமீ 5 ந் வ.

பி. கொன்ஸ்றன்ரைன்,
வடமாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கீழ் மாகாணத்தில் வாகநேரிக் குளத்திற்குச் சேர்ந்த 1 ம் இலக்கக் கப்புவாய்க்காலுக்காகச் சேமித்து வைக்க என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

1 ம் இலக்க நீர்பாச்சல் பிரதமப்படத்தில் 1 ம் இலக்கப் பகுதிப்பிரதி. கண்டம்—சூடுபத்தினசேனை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 48 | சூடுபத்தின சேனைக்காடு .. | காடு .. | ஓட்டைமாவடியிலிருக்கும் மீராலெவ்வை அகமது லெவ்வைப்போடி | 0 1 12 |
| 50 | வாய்க்கால் கட்டு .. | கட்டு .. | ஷை .. .. | 0 1 14 |
| 51 | 1 ம் இலக்கக்கப்பு வாய்க்கால் | வாய்க்கால் .. | ஷை .. .. | 0 0 22 |
| 52A | சூடுபத்தின சேனைக்காடு .. | காடு .. | ஷை .. .. | 0 1 22 |
| 124 | கல்வளைப்பூமி .. | பாள் நிலம் .. | மட்டுக்களப்பிலிருக்கும் ச. குமாரசுவாமி .. | 0 0 26 |
| 125 | வாய்க்கால் கட்டு .. | கட்டு .. | ஷை .. .. | 0 0 32 |
| 126 | கல்வளைப்பூமி .. | பாள் நிலம் .. | ஷை .. .. | 0 1 14 |
| 127 | 1 ம் இலக்கக் கப்புவாய்க்கால் | வாய்க்கால் .. | ஷை ... .. | 0 0 13 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏபாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவருடைய காரியகாரர்மூலமாய் 1921 ம் ஞூ புரட்டாதிமாசம் 30 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு கற்குடா வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிஉள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மட்டுக்களப்பு கச்சேரி,
1921 ம் ஞூ ஆவணிமீ 5 ந் வ.

சீ. வீ. பிறேயின்,
கீ. மா. அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ரோட்டுக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 5,555. குறிச்சி—சம்மாந்துறைப் பற்றிலிருக்கும் மல்வத்தை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | செம்பிமடுக்குளம் .. | நெற்காணியும் ரோட்டும் .. | சம்மாந்துறை 1 ம் குறிச்சியிலிருக்கும் செ. பொ. த. மீராலெவ்வை | 0 0 15·1 |
| 3 | செம்பிமடுவயல் .. | ஷை .. | ஷை .. .. | 0 0 29·5 |
| 4 | செம்பிமடுவெளி .. | ஷை .. | சம்மாந்துறை 2 ங் குறிச்சியிலிருக்கும் உ. உ. சுலேமாலெவ்வை ஆலிம் | 0 2 15·4 |
| 5 | செம்பிமடுமேட்டுக்கண்டம் | ஷை .. | காத்தான்குடி 3 ங் குறிச்சியிலிருக்கும் அ. உதுமாலெவ்வை | 0 1 13 |
| 6 | ஷை .. | சேனை | ஷை .. .. | 0 0 19·8 |
| 8 | பட்டிப்பூமி .. | சேனையும் ரோட்டும் .. | சம்மாந்துறை 2 ங் குறிச்சியிலிருக்கும் உ. உ. சுலேமாலெவ்வை ஆலிம் | 0 0 33·1 |
| 11 | செம்பிமடுமேட்டுக்கண்டம் | சேனை .. | காத்தான்குடி 3 ங் குறிச்சியிலிருக்கும் அ. உதுமாலெவ்வை | 0 0 10·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ம் ஞூ புரட்டாதி மாதம் 14 ந் தேதியிலன்று 1 மணிக்கு சம்மாந்துறைப் பள்ளிக்கூடத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மட்டுக்களப்புக் கச்சேரி,
1921 ம் ஆண்டு ஆவணிமீ 5 ந உ.

சீ. வீ. பிறேயின்,
கீ. மா. அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் குருநாக்கல் சுகாதாரசங்கத்துக்காக கூலிகளிருக்கும் வீடுகள் கட்டுதல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 5,013. குறிச்சி—குருநாக்கல் சுகாதார சங்கத்துக்குட்பட்ட இறுப்பைக்கெதிரை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | காலைஅத்தறப்பின்கொட்டுத .. | தென்னந்தோட்டம் .. | வீரப்பாச்சியின் உரிமைக்காறரும் மாரிமுத்துவும் கமலம்மாவும் | 0 0 24 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ம் ஞூ செப்டம்பர் மாசம் 12 ந் தேதியன்று பின்னேரம் 1 மணிக்கு குருநாக்கல் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருநாக்கல் கச்சேரி,
1921 ம் ஞூ ஓகஸ்துமீ 8 ந் உ.

எவ். ஜீ. ரீதல்,
அரசாட்சி ஏசண்டு, வடமேல் மாகாணம்.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கால்எற்றதென்னையில் வலம்செலுத்தப்படும் குளிகள் சரிபண்ணுவதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 2,159. குறிச்சி—கால்எற்றதென்ன.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | அந்தோனிஅருவகும்புற .. | வயல் .. | கொடவத்த அப்புகாமி .. | 0 0 4·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டியபிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ம் ஞூ புரட்டாசி மாசம் 5 ந் தேதியிலன்று 1 மணிக்கு கல்மூல்ல வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1921 ம் ஞூ ஆவணிமீ 3 ந் உ.

ஆர். என். தேன்,
ஊவா அரசாட்சி ஏசண்டு.

### உரிமைபெறும் யாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இல. 7,931, களுத்துறை.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள், 1921 ம் ஹூ (ஆகஸ்டு) ஆவணிமீ 12 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம்பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் என். ஏ. காம்றோன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

என். ஏ. காம்றோன்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு.—இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விவரம்.

மேன் மாகாணம் களுத்துறை டிஸ்திறிக் பஸ்துன்கோறளை மேற்கு வலல்லாவித்த பத்துவைச்சேர்ந்த இற்றப்பான கிராமத்திலிருக்கு மித்துடனணைக்கப்படும் படப்பிரதிகளில்* விபரித்தபடியே கீழ்க்குறிக்கப்படுங் காணித்துண்டுகள் :—

I.—இலங்கை யளவைப் பிரதமபடம் 78.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 2AH .. | புவக்காவலபகலக்கற்றிய .. .. .. .. | 0 0 5 |
| 2AI .. | பொத்துக்கும்புறஎல .. .. .. .. | 0 0 20 |
| | | 0 0 25 |

எல்லைகளாவன: வடக்கு-பொத்துக்கும்புறஎல, பாணிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட புவக்காவெலபகலக்கற்றிய, பொத்துக்கும்புற எல; கிழக்கும் தெற்கும் மேற்கும்-இற்றொற்றுவே கும்புறயாய (கிராமத்தாற் குரியது).

II.—இலங்கை யளவைப் பிரதமபடம் 78.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 94c2 .. | மதவிற்ற வெலிப்பின்னேருட்டு .. .. .. | 0 0 9 |

எல்லைகளாவன: வடக்கு-பாணிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட மடவிற்ற வெலிப்பின்னேருட்டு; கிழக்கும் தெற்கும்-72,980 ம் உ. ப. ல் காணுங் காணியின் பகுதி; மேற்கு-குறுக்குருேட்டு.

*இங்கிலீசின் மூன்றாம் பாகம் 1093—1094 ம் பக்கங்களின் படத்தைப் பார்க்குக.

[களுத்துறை வி. உ. 1—1921.]

---

[அறிவித்தல் இல. 7,932, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1921 ம் ஹூ (ஆகஸ்ட்) ஆவணிமீ 12 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் என். ஏ. காம்றோன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

என். ஏ. காம்றோன்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு.—இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை யறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேன் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் கிறியலகத்பத்து மகாகல்பொடஎகொடக் கோறளையில் சிரு துன்னக் கிராமத்திலிருக்கு மித்துட னணைக்கப்படும் படப்பிரதிகளில்* விவரித்தபடியே கீழ்க்குறிக்கப்படும் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் 1,949.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| H 943 | தெலம்புகாமுலபில்லேவ | 1 1 28 |
| I 943 | ஷை | 0 1 0 |
| | | 1 2 28 |

எல்லைகளாவன : வடக்கு-வேதெனிய கிராம வெல்லை; கிழக்கு-பாணிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட கனுகெற்றியேபில்லேவ; தெற்கு-முதியான்சிவெதறலாகே டிங்கிறியப்புகாமி வுருத்தாடும் தெலம்புகாகும் புற, அப்புகாமிவேவத்தேருலாகே டிங்கிறிவண்டாவும் மறுபேரு முரித்தாடும் தெலம்புகாகும்புற, கிறினைதலாகே யுக்கு னைதயும் மறுபேரு முருத்தாடும் தெலம்புகாகும்புற; மேற்கு-முடியால் விற்கப்பட்ட தெலம்புகாமுலபில்லேவ.

II.—பிரதமபடம் 1,949.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| Q 993C | தெலும்புகாபில்லேவ | 0 3 21 |

எல்லைகளாவன : வடக்கு-முடியால் விற்கப்பட்ட தெலும்புகாபில்லேவ; கிழக்கு-முதியான்சே வெதறலாகே டிங் கிரியப்புகாமி வுரித்தாடும் தெலம்புகாகும்புற, இரிபந்தலாகே அப்புகாமியும் மறுபேரு முரித்தாடும் தெலம்புக்காபுருன, டிங்கிரியப்புகாமிலாகே புஞ்சிவண்டாவும் மறுபேரு முரித்தாடும் அஸ்வெத்தும்ம, முடியால் விற்கப்பட்ட அஸ்வெதும்ம பில்லேவ, இரிபந்தலாகே யப்புகாமியும் மறுபேரு முரித்தாடும் அஸ்வெத்தும்மபுருன; தெற்கு-பாணிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட எல; மேற்கு-றெக்குபண்டா அப்புகாமியும் புஞ்சிபண்டாவு முரித்தாடும் தெலம்புக்காகும்புறபில்லேவ.

III.—பிரதம படம் 1,949.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| L 948 | கொன்கொல்லேபில்லேவ | 0 1 36 |
| M 48 | ஷை | 0 2 19 |
| | | 1 0 15 |

எல்லைகளாவன: வடக்கு-புஞ்சிருல விதானேலாகே கௌருலவும் மறுபேரு முரித்தாடும் கொலொன்கொல்ல புஞ்சிறலாகே யப்புகாமியும் மறுபேரு முரித்தாடும் கொலொன்கொல்லகும்புற; கிழக்கு-முடியால் விற்கப்பட்ட பின் கொல்ல; தெற்கு-கனுவ கிராம வெல்லை; மேற்கு-றன்கமில்லாகே டிங்கிரி அம்மாவும் மறுபேரும் முரித்தாடும் பகலகொலொன்கொல்லபுருன.

* இங்கிலீசின் மூன்றும் பாகம் 1094—1095 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்கு.

[குருநாக்கல் வி. உ. 70—1921.]

---

[அறிவித்தல் இல, 7,933, ஊவா.]

1897 ம், 1899, 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணியிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள், 1921 ம் ஆகஸ்ட் (ஓகஸ்ட்) ஆவணிமீ 12 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே வதுளை கச்சேரியில் ஊவா மாகாணத்து அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டென ஆள்மூலமாய் அல்லது எழுத்துமூலமாய் சாதித்தாலன்றி சொல்லப்பட்ட நிலத்தை அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு 1897 ம் ஆண்டின் 1 ம் இலக்க சட்டத்தினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணி முடிக்குரியதென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ஆர். என். தேன்,
ஊவா அரசாட்சி ஏசென்று.

கவனிக்கவேண்டியது.—சொல்லப்பட்ட காணிக்கு போகிற வழிக்கு உருத்துண்டானால் சொல்லப்பட்ட காணியில் உருத்திருக்கிறதென விளங்கும்.

சொல்லப்பட்ட காணியின் விவரம்.

இத்துடன் அணைத்துவரும் படத்திலும்*, 2,071 ம் பிறிலிமறி பிலானில் காட்டிய 6 ஏக்கர் 3 றூட்டு 3 பேட்ச அடங்கிய 23 ம் துண்டாகிய ஊவா மாகாணத்தில் உள்ள வதுளை டிஸ்திறிக்கைச்சேர்ந்த வெல்லவாய பிரிவின் உள்ள கந்தபெல்ல கோறளையின் கிறிவனகம கிராமத்திலுள்ள ரிக்கிறிஅருவ அல்லது கெற்றபெல்லயேன என்று அறிந்த அல்லது அழைத்துவரும் நிலம். இதன் எல்லைகள் : வடக்கு-முடிக்கு என்று விட்டிருக்கும் (2,071 பி. பி. 24 ம் துண்டுகாட்டியிருக்கும்) நமுல்லயேன அல்லது கெறறபொல்லயேன அல்லது ரிக்கிறிஅருவ; கிழக்கு-முடியால் உருத்தாடப்படும் (2,071 பி. பி. 21 ம் துண்டில் காட்டிய) கெற்றபொல்லயேன அல்லது உடமுல்லலாந்த; தெற்கு-முடிக்கென்று விட்டிருக்கும் (2,071 பி. பி. துண்டு 22 ல் காட்டியிருக்கும் கெக்கேவெல்லாந்தமுக்கலான அல்லது கெற்றபொலயேன அல்லது ரிக்கிறிஅருவ என்னும் நிலம்; மேற்கு-முடிக்கென்று விட்டிருக்கும் (2,071 பி. பி. துண்டில் காட்டியிருக்கும்) ரிக்கிறிஅருவ அல்லது கெற்றபொலயேன.

* இங்கிலீசின் மூன்றும் பாகம் 1096 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

## 1912 ம் ஆண்டின் 8 ம் இலக்க மதுயானத்தீர்வைச் சட்டத்தின்கீழ் அறிவித்தல்.

### 1922—23 ம் ஆண்டு கள்ளுத் தவறணைகளைப்பற்றி ஊர்ச்சனங்களின் சம்மதி அறிவதைக்குறித்த விளம்பரம்.

மத்தியமாகாணம் மாத்தளைடிஸ்திறிக் உதவி ஏசன்றுதுரை அவர்கள் 1921 ம் ஆண்டு ஆனிமாசம் 10 ந் திகதியையும் 124 ம் இலக்கத்தையும் கொண்ட குடிவகை விளம்பரப் பிரமாணங்களின் 5 ம் பிரமாணத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு தவறணையிருக்கும் பற்றுகளில் வசிக்கும் குடிசனங்களின் தலைவரிப்பணம் கொடுப்பவர்களுள் 100 க்கு 75 பெயர் அந்தத்தவறணை இருக்கிற இடத்தில் இருப்பதற்கு மாறோ என்று அறிவதற்கு பின்சொல்லப்படும் திகதியையும் இடத்தையும் நியமனம் செய்திருக்கிறார் என்று இத்தால் சகலரும் அறியவேண்டியது :—

உடுகம கள்ளுத்தவறணையைப்பற்றி பலாபத்வல கன்சாவாவில் 1921 ம் ஆண்டு ஆவணிமாதம் 31 ம் திகதி புதன்கிழமை பிற்பகல் இரண்டுமணி தொடங்கி ஐந்துமணி வரைக்கும்.

மாத்தளைக் கச்சேரி,
1921 ம் ஆண்டு ஆவணிமீ 4 ந் உ.

சீ. கரிசன்யோனஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

### சாமான்கள் கொடுக்கிறதற்குக் கேள்விப்பத்திரம்.

நார்க்கடகம், ஓலைப்பாய், ஓலைஉமல், தேங்காய் எண்ணெய், ஆமணக்கெண்ணெய், மண்ணெண்ணெய், பனைஓலை, தும்புக்கட்டு, ஈக்குக்கட்டுக் கூட்டத்தடி, தும்புக்கயிறு, சாக்கு என்னும் இந்தச் சாமான்கள் கேட்குநேரமே யாழ்ப்பாணம் உப்புமால் சிவியாதெரு உப்பளம், தொண்டமனூர் உப்புக்குதம் ஆகிய இந்த விடங்களில் கொடுக்கிறதற்கு 1921 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1922 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதி வரையில் ஒப்பந்தம் கேட்க விரும்புபவருடைய கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும்.

2\. கேள்விப்பத்திரம் இணைப்பிரதியாகவும் முத்திரையிடப்பட்டதாயு மிருத்தல் வேண்டும். மூலப்பிரதி வடமாகாண ஏசன்றுத்துரை அவர்களுக்கும் இணைப்பிரதி கொழும்பு அரசிறை வருமானத்தலைவர் கந்தோருக்கும் விலாசம் போட்டிருத்தல் வேண்டும்.

3\. கேள்விப்பத்திரம் கேள்விக்காரன் தானுகக்கொடுக்கலாம் அல்லது தபாலில் அனுப்பலாம். இரண்டு பிரதிகளும் ஒரே நேரத்தில் அனுப்பப்படல் வேண்டும்.

4\. கேள்விப்பத்திரத்தில் Tender for supplying Materials 1921–22 என்று உறையின் இடதுபக்க மேல்மூலையில் போடப்பட்டிருத்தல் வேண்டும். அப்பத்திரம் யாழ்ப்பாணக் கச்சேரியில் 1921 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 9 ந் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன் சேரவேண்டும்.

5\. கேள்விப்பத்திரம் எழுத மாதிரிக்கடதாசி யாழ்ப்பாணம் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். அந்த மாதிரிக் கடதாசியில் எழுதாத வேறு எவ்விதப் பத்திரமும் ஏற்கப்பட மாட்டாது. மாற்றங்களுக்கு கையொப்ப முதலெழுத்துக ளிடப்பட வேண்டும். அல்லாவிடில் கேள்விப்பத்திரங்கள் பிழையென விலக்கப்படும்.

6\. கச்சேரியில் ரூபா 20 கட்டிப் பற்றுச்சீட்டுக் காட்டினவருக்கே மாதிரிக் கடுதாசி கொடுபடும். ஒருவருடைய ஒப்பந்தக் கேள்வியை ஏற்றுக்கொண்டதென்று அறிவித்தல் கொடுத்த நாள்தொடக்கம் பத்து நாளைக்குள் ஒப்பந்தம் ஏற்க பிணைகொடுக்க அல்லது உறுதிமுடிக்கத் தவறினல், கட்டின காசு கவுண்மேந்துக்கு இனுமாகும். அப்படித் தவறினவர் கவுண்மேந்து ஒப்பந்தங் கொடுக்கப்படாதென்று விலக்கப்பட்ட ஒப்பந்தக்காறருடைய பெயர் பதியப்படும் இடாப்பில் பதியப்படுகிறதற் காளாவார். ஒப்பந்தம் கைச்சாத்திட்டு முடிவானவுடன் மற்றக் கேள்விக்காறருடைய காசு திருப்பிக் கொடுபடும்.

7\. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தோடு இரண்டு தகுதியான பேர் பிணைநிற்போமென்று சம்மதம் காட்டும் பத்திரமும் அணைத்திருக்க வேண்டும். அவர்களுடைய விலாசமும் காட்டியிருக்க வேண்டும்.

8\. ஒப்பந்தம் கொடுக்கும் நாளில் கொடுக்கவேண்டிய சாமான்களுக்கு மாதிரிப் பொருட்களுங் கொடுக்கவேண்டும்

9\. ஒப்பந்தத்தைச் சரியாய் ஒப்பேற்றுவதற்காகப் போதிய பிணைகாரர் பிணையுறுதிக்குச் சேரவேண்டும். பிணையுறுதியின் தொகையும் வேறுவித தேவையான விபரங்களும் கந்தோரில் கேட்டுக்கொள்ளலாம்.

10\. மேற்சொல்லப்பட்ட பிரமாணங்களுக்கு அமையாத யாதொரு கேள்விப்பத்திரமும் கவனிக்கப்பட மாட்டாது.

11\. எந்தக் கேள்விப்பத்திரத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்க அல்லது நியாயஞ் சொல்லாது மறுக்க முழு உருத்தும் கவுண்மேந்துக்கு உண்டு.

எச். பி. கோப்மன்,
கவண்மேந்து ஏசன்றுக்காக

யாழ்ப்பாணக் கச்சேரி,
1921 ம் ஸ்ரீ ஆவணிமீ 9 ந் உ.

H. R. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.